**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

**பி.வா.சா. – 1– கருப்பாயி (எ) கலையரசி, க/பெ.தங்கவேல்**

**நாள். 09.01.2026**

**<u>பி.வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வழக்கின் 2ஆம் பிரதிவாதியாவேன். வழக்கின் 3ஆம் பிரதிவாதி என் மகள் என்றால் சரிதான். வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளாரகள் என்ற விபரம் எனக்கு தெரியும். வழக்கு சொத்துக்களும், இதர சொத்துக்களும் ஆதியில் கருப்பண கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கருப்பண கவுண்டருக்கு அழகிய கவுண்டர், ஆறுமுக கவுண்டரும் வாரிசுகள் என்றால் சரிதான். கருப்பண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு அவர் பெயரில் தான் பட்டா தாக்கலாகி இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியும். மேற்படிக கருப்பண கவுண்டரின் வாரிசுகள் கடந்த 07.12.1976ல் ஒரு பாகப்பிரிவினை ஏற்பத்தி அதன் படி அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்த வழக்கில் கண்ட பிராது சொத்தானது ஆறுமுக கவுண்டருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து, அந்த சொத்தின் பட்டாவானது இன்றுவரை கருப்பண கவுண்டர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பட்டாவானது எனது மகள் பானுப்பிரியாவின் பெயருக்கு மாற்றலாகி கிஸ்தீ கட்டி வருகிறார். ஆறுமுக கவுண்டருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். மூத்த மனைவி பெயர் நல்லமாள், 2வது மனைவி பெயர் மீனாட்சியம்மாள் என்றால் சரிதான். மூத்த மனைவிக்கு நாச்சம்மாள், பெரியம்மாள், முத்தம்மாள், 1ஆம் பிரதிவாதியான முத்துச்சாமி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். 2வது மனைவிக்கு இறந்து போன 1ஆம் வாதி சண்முகம் (எ) ராஜண்ணா, பழனிம்மாள், கருப்பாயி (எ) கலையரசி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கில் வாதிகளுக்கு பிரதிவாதிகளுக்கும் யார் யார் வாரிசுகள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டர் இறப்பதற்கு முன்னர் அவரில் இரண்டு மனைவிகளும் இறந்துவிட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கடந்த 07.12.1976 பாகபிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். மேற்படி பாகப்பரிவினை பத்திரத்தில் பி– பட்டியல் சொத்தான ஒதுக்கப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும். 1ஆம் பிரதிவாதியான முத்துச்சாமிக்கு சி – பட்டியல் சொத்தான ஒதுக்கப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும். வாதிகள் ஆறுமுக கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பி – பட்டியல் சொத்துகளுக்கு தான் வழக்கானது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். ஆறுமுக கவுண்டர் இறந்த சமயத்தில் அவருக்கு 90 வயது இருக்குமா என்றால் அவருக்கு 85 வயது இருக்கலாம். ஆறுமுக

கவுண்டர் உயிருடன் இருக்கும் போது அவரின் பெண் பிள்ளைகளுக்கு சீர்வரிசை செய்து நல்ல முறையில் திருமணம் செய்துவைத்தார் என்றால் சரிதான். எனது கணவர் பெயர் தங்கவேல் என்றால் சரிதான். எனக்கு 1980ல் திருமணம் நடைபெற்றது. எனது கணவர் தமிழ்நாடு அரசு வனத்துறையில் வேலை பார்த்த போது பணிமூப்பு பெறுவதற்கு முன்பாகவே 28.12.2001ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது கணவர் இறப்பதற்கு முன்பாக Forest Ranger ராக பதவி உயர்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். மூத்த மகள் ஜெயராணி, இளைய மகள் பானுப்பிரியா ஆவார். வழக்கின் 3ஆம் பிரதிவாதி பானுப்பிரியா என்றால் சரிதான். மூத்த மகளுக்கு 2006ஆம் ஆண்டு கோவையில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். இளைய மகள் 3ஆம் பிரதிவாதிக்கு 2021ஆம் ஆண்டு அமெரிக்காவில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி திருமணத்திற்கு நான் சென்றேன் என்றால் சரிதான். எனது கணவரின் இறப்பிற்கு பின்னர் நான் தற்போது வரை  ஓய்வூதியம் வாங்கி வருகிறேன் என்றால் சரிதான். எனது தரப்பில் பி.வா.சா.ஆ.3 உயில் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் 3ஆம் பிரதிவாதி அமெரிக்காவில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. 3ஆம் பிரதிவாதி பாஸ்போட்டை சரி பார்த்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். 3ஆம் பிரதிவாதியின் பாஸ்பேட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் எனது மகளிடம் கேட்டு சொல்கிறேன். பி.வா.சா.3 உயில் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் நான் திண்டுக்கல் RM காலனியில் குடியிருந்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.வாசா.3 ஆவணமானது திண்டுக்கல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தானது ஒட்டன்சத்திரம் தாலுகா, புளிமரத்துக்கோட்டை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். ஒட்டன்சத்திரம் தாலுகாவில் சார்பதிவாளர் அலுவலகம் உள்ள விபரம் எனக்கு தெரியும். பி.வாசா.3 ஆவணமானது ஒட்டன்சத்திரம் தாலுகா சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யாமல் திண்டுக்கல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய குறிப்பிட்ட காரணம் எதுவும் உள்ளதா என்றால் என்து தகப்பனாரின் விருப்பத்தின் பேரில்  திண்டுக்கல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தார். எனக்கு வேண்டிய நபர்களை வைத்து பி.வா.சா.ஆ3 ஆவணமான பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டரை 1ஆம் பிரதிவாதி முத்துச்சாமி இறந்து போன 1ஆம் வாதி ராஜண்ணா உயிருடன் இருக்கும் வரையில் பராமரித்து வந்தார்கள் 1ஆம் வாதியின் இறப்பிற்கு பின்னர் அவரின் வாரிசு 5ஆம் வாதி சுரேஷ் என்பவர் பராமரித்து வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல, என்னுடைய பரமாரிப்பில் தான் ஆறுமுக கவுண்டர் இருந்தார். தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் போலியாக பி.வா.சா.3 ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இன்றுவரை உயில் ஊர்ஜிதத்திற்கு

வரவில்லை அகவே அதனை பொருட்டு எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் தற்போது வரை திண்டுக்கலில் தான் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல, நான் தற்போது சீத்தப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கும் போது ஒருவருக்கும் மட்டும் ஆறுமுக கவுண்டார் உயில் எழுதி வைத்துள்ளது நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் இளைய மகளுக்கும் கடந்த 7,8 வருடமாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டரின் இறப்பு செலவினங்கள் அனைத்தும் 5ஆம் வாதி சுரேசும், 1ஆம் பிரதிவாதி முத்துசாமியும் செலவினங்கள் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பெண் மக்கள் யாரும் எவ்வித செலவினங்களும் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டரின் முதல் மனைவியின் மகன் முத்துச்சாமி மீது பாசமாக இருப்பார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டர் உயிருடன் இருந்த நிலையில் அவர் உயில் எழுதி வைக்கும் எண்ணத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள், பிரதிவாதிகள் அனைவரும் கூட்டாக சொத்தை அனுபவித்து வந்த நிலையில் வாதிகள் அவர்களுக்கு உள்ள பங்கை 2015ஆம் ஆண்டு பாகத்தை பிரித்து தருமாறு 1ஆம் பிரதிவாதி முத்துசாமியிடமும், என்னிடமும் கேட்டதற்கு பின்னர் பிரித்துக்கொள்ளலாம் என்று நானும் 1ஆம் பிரதிவாதி முத்துச்சாமியும் பிரித்து தராமல் காலம் தாழ்த்தி வந்ததாக சொன்னால் அவ்வாறு இல்லை. பிராது சொத்தில் 1ஆம் பிரதிவாதிக்கு ஒரு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி முத்துச்சாமியை ஏமாற்றும் நோக்கில் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதிக்கு வேண்டிய சொத்தை நாங்கள் நீதிமன்ற ஆணையின் படி பரித்து தர வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.01.12 03:55:19 +0530

Additional District Judge,

Dindigul.